සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**61 T I**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ........................................ புவியியல் I நேரம் : 1 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

- **1 - 10 வரையான வினக்களுக்கு தரப்பட்டுள்ள இடை வெளிகளுக்கு பொருத்தமான விடைகளை** அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

01. வளிமண்டலத்தின் மிகத்தாழ்ந்த வெப்பநிலையான $-90^0C$ வெப்ப நிலையைக் கொண்ட மண்டலம் ........................................ ஆகும். (வெப்ப மண்டலம் / படை மண்டலம் / இடை மண்டலம்)

02. சூரிய சக்தி, மண், ........................................ ஆகியன உயிர்க் கோளத்தின் செயன்முறைக்கு செல்வாக்குச் செலுத்தும் உயிரற்ற கூறுகளாகும். (தாவரம் / காலநிலை / விலங்குகள்)

03. புவியமைப்புக்கேற்ப புவியின் மேற்பரப்பிலிருந்து உள்நோக்கி 2900km -5150km இடையில் அமைந்திருப்பது ........................................ ஆகும். (மேல்மூடி/ கீழ்மூடி/ வெளிமையம்)

04. உயரம் குறைந்த மிகவும் பரந்த பிரதேசத்தில் வியாபித்துக் காணப்படும் பெரிய சைபீரியன் சமவெளி ........................................ கண்டத்திற்கு உரியதாகும். (ஆசியா / ஆபிரிக்கா / ஐரோப்பா)

05. சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து உயர்ச்சி அடைந்துள்ள பாரிய நிலத்திணிவுகள் ........................................ எனப்படும். (தீபகற்பம் / தீவு / கண்டங்கள் )

06. விக்டோரியா ஏரியில் உற்பத்தியாகி மத்தியதரைக் கடலில் கலக்கும் நதி ........................................ ஆகும். (மிசுசிபி / நைல் / மறேடாலிங்)

07. பபுவா நியுகினி தீவு அமைந்திருப்பது ........................................ கண்டத்திலாகும். (அவுஸ்திரேலியா / ஆபிரிக்கா / ஆசியா )

08. முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கஸ்பியன் கடலானது ........................................ கொண்டது. (உப்புநீர் / உவர்நீர் / நன்னீர் )

09. வளமான வண்டல் மண்ணில் மிகவும் செழிப்பாக வளரும் பயிர் ........................................ ஆகும். ( நெல் / தேயிலை / கோதுமை )

10. உலகில் தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகளைக் கொண்ட வலயமானது ......................... ஆகும். (ஆபிரிக்கா / ஆசியா / ஐரோப்பா)

- 11 - 15 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (ச) எனவும் பிழையாயின் (பி) எனும் அடையாளத்தை அடைப்பினுள் வட்டமிடுக.

11. புவியின் மொத்த மேற்பரப்பில் 71% நிலத்தாலும் 29% நீராலும் அமைந்து காணப்படுகிறது. (ச / பி)

12. படிவு வீழ்ச்சி மூலம் புவிக்கு வந்தடையும் நீரின் ஒரு பகுதி நிலத்தினுள் ஊடுவடிந்து தேங்கி நிற்கும். (ச / பி)

13. புவி அமைப்பில் வெளி மையம் திரவ உலோகத்தினாலும் உள் மையம் தடிப்பான உலோகப் படையைக் கொண்டது. (ச / பி)

14. எல்லாக் கண்டங்களினதும் எல்லைகளில் கண்டமேடை காணப்படும். (ச / பி)

15. புவிக்கோளத்தில் தென் முனையை விட வடமுனையில் வெப்பம் குறைவாகும். (ச / பி)



kalvi.lk

- **16 - 20 வரையான வினாக்களுக்கு "அ" நிரலை "ஆ" நிரலுடன் இணைப்பதன் மூலம் பெறப்படும் சரியான** விடையினை அடைப்பினுள் இடுக.

16. புவிக்கோளத்தில் வளி மண்டலப்படைகளை "அ" நிரலிலும் அவை பரந்து காணப்படும் எல்லைகள் "ஆ" நிரலிலும் காட்டப்பட்டுள்ளது. அவற்றைப் பொருத்தமான முறையில் இணைக்கவும்.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A 50km - 80jn |
| 2. படை மண்டலம் | B O - 20 km |
| 3. இடை மண்டலம். | C 21km - 40km |
| | D 20km -50km |

i. BDA　　ii. C, B, A　　iii. D, A, B　　iv. C, B, D　　(...........)

17. உலகில் அமைந்துள்ள பல்வேறு நிலத்தோற்றங்கள் 'அ" நிரலிலும் அவை அமைந்து காணப்படும் இடங்கள் "ஆ" நிரலிலும் காட்டப்பட்டுள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்தி இணைக்கும் போது பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. நீளமான மலைத்தொடர் | A சுப்பீரியர் |
| 2. பெரிய ஏரி | B அட்லஸ் |
| 3. உயர்ந்த மேட்டுநிலம் | C அந்தீஸ் |
| | D பமீர் |

i. CDA　　ii. BCA　　iii. CAD　　iv. ACB　　(...........)

18. கற்கோளத்துக்குரிய புவித்தட்டுகள் பல "அ" நிரலிலும் அதற்குரிய தீவுகள் "ஆ" நிரலிலும் காணப்படும். இவற்றை ஒழுங்குபடுத்துக.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. யுரேசியன் தகடு | A ஹவாய் |
| 2. இந்து அவுஸ்திரேலியத் தகடு | B இலங்கை |
| 3. வட அமெரிக்கத்தகடு | C கிறீன்லாந்து |
| | D பிரித்தானியா |

i. ADB　　ii. DBC　　iii. BAD　　iv. CAD　　(...........)

19. உலகிலுள்ள நதிகள் பல 'அ" நிரலிலும் அதற்குரிய கண்டம் "ஆ" நிரலிலும் காணப்படும். இவற்றை இணைப்பதன் மூலம் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. கொங்கோ நதி | A ஐரோப்பிய கண்டம் |
| 2. இந்து நதி | B ஆபிரிக்கா கண்டம் |
| 3. டெனியூப் நதி | C ஆசியா கண்டம் |
| | D தென் அமெரிக்கா |

i. CAD　　ii. BDC　　iii. ACD　　iv. BCA　　(...........)

20. உலகில் பிரதான காலநிலை வலயம் "அ" நிரலிலும் அதற்குரிய நாடுகள் சில "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. இதனை இணைப்பதன் மூலம் பெறப்படும் விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. அயன வலயம் | A பிலிப்பைன் தீவு |
| 2. வெப்ப வலயம் | B கிறீன்லாந்துத்தீவு |
| 3. கடும் குளிர் வலயம் | C ஜப்பான் தீவு |
| | D நியுஸிலாந்து தீவு |

i. ACB　　ii. BAC　　iii. DCA　　iv. CDA　　(...........)

- 21 - 25 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடையை எழுதிப் பூரணப்படுத்துக.

21. தரையுயர்ச்சி வேறுபாடுகளுக்கமைய ஒவ்வொரு 1000m க்கும் வெப்பநிலை $6.4^{0}C$ வீதம் குறைவடைவதை ................................... எனப்படும்.

22. கற்கோளத்தினுள் திரவமாகவும் திண்மமாகவும் காணப்படுவதுடன் வளிக் கோளத்தில் நீராவியாகவும், முகிலாகவும் உள்ளடங்கியிருப்பது................................... ஆகும்.

23. புவியில் மிக உயரத்தில் அமைந்திருக்கும் டிடிக்கா ஏரி ................................... கண்டத்திற்குரியது.

Education கல்வி අධ්‍යාපන




kalvi.lk

24. தெளிவான வெப்பபருவத்தினையும் மழையுடன் கூடிய குளிர் பருவத்தினையும் அவதானிக்க **முடிவது** ......................................... காலநிலைப் பிரதேசத்திலாகும்.

25. நொரின் 10 என்பது அதிக விளைச்சலைத் தரக் கூடிய புதிய இனக் ................................... விதையாகும்.

- **26 - 28 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் உலகப் படத்தைப் பயன்படுத்துக.**





26. உலகில் ஐம்பெரும் ஏரி .............. எழுத்தினால் குறிப்பிட்டுள்ளது.

27. யூரல் மலைத்தொடர் .............. எனும் எழுத்தில் காட்டப்பட்டுள்ளது.

28. துல்லாபார் சமவெளி .............. எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.

- 29 - 30 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு புவி நீர்ப்பரம்பல் பற்றிய உருவினைப் பயன்படுத்துக.




29. புவி நீர்ப்பரம்பலில் பனிப் போர்வையையும் பனியாறுகளையும் கொண்ட எழுத்து .............. ஆகும்.

30. புவிக் கோளத்தில் உவர் நீரைக் கொண்ட பகுதி .............. எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

- 31 - 40 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

31. வளிமண்டலத்தில் பிரதான வாயுச் சேர்க்கையில் 20.95% காணப்படும் வாயு எது?
i. நைதரசன் ii. ஐதரசன் iii. ஒட்சிசன் iv. காபனீரொக்சைட்டு

32. மனித நிலவுகைக்கு அவசியமான ஒளித்தொகுப்பு செயற்பாடு இடம் பெறுவது எவ்வுபகூறிலாகும்.
i. கற்கோளம் ii. உயிர்கோளம் iii. வாயுக் கோளம் iv. நீர்க்கோளம்

33. உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களை உறிஞ்சிக் கொள்ளும் மண்டலம் பின்வருவனவற்றுள் எது?
i. மாறன் மண்டலம். ii. படைமண்டலம் iii. இடைமண்டலம் iv. வெப்ப மண்டலம்

34. புவி மேற்பரப்பு நிலப்பரப்பில் 29.5% நிலமானது எக்கண்டத்துக்குரியதாகும்?
i. ஆசியக் கண்டம் ii. ஐரோப்பாக்கண்டம்
iii. ஆபிரிக்காக் கண்டம் iv. அந்தாட்டிக்கா கண்டம்



kalvi.lk

35. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவு ஒன்று.
i. ஹவாய் ii. சீசெல்ஸ் iii. தாய்வான் iv. ஹய்ட்

36. உலகில் காலநிலைப்பரம்பல் பற்றிய கருத்தினை முதன் முதலில் வெளியிட்டவர் யார்?
i. ஒஸ்டின் மிலர் ii. அல்பிரட் வெஸ்னர்
iii. ஆதர் ஹோம்ஸ் iv. அரிஸ்டோட்டில்

37. அயனவலய காலநிலைக்குரிய பாலைவனமொன்று பின்வருமாறு.
i. அரிசோனா ii. சஹாரா iii. கோபி iv. பட்டகோனியா

38. உலகில் ஆசியாக் கண்டத்தைத் தவிர ஏனைய நெல்லுற்பத்திப் பிரதேசமொன்று.
i. தாய்லாந்து ii. மியன்மார் iii. இந்தோனேசியா iv. மடகஸ்கார்

39. பெருந்தோட்ட விவசாயப் பயிராகவும் படிப்படியாக விரிவடைந்து வரும் ஒரு பயிராகவும் காணப்படும் பயிர் பின்வருவனவற்றில் எது?
i. நெல் ii. கோதுமை iii. இறப்பர் iv. பருத்தி

40. தேயிலைச் செய்கைக்கு மிகச் சாதகமான காரணி பின்வருவனவற்றுள் எது?
i. மழைவீழ்ச்சி 1900 mm - 5460 mm வரை
ii. வெப்பநிலை $27^{0}$C யாகும்
iii. கபொக் கலந்த சிவப்பு மண்
iv. புதிய இயந்திர சாதனங்கள்

* * *

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**61 T II**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் .........................................** **புவியியல் II** **நேரம் : 2 மணித்தியாலம்**

- **இவ்வினாத்தால் பகுதி i, பகுதி ii என இரண்டு பகுதிகள் காணப்படும்.**
- **முதலாம் வினாவுக்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் பகுதி i யில் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும்.**


## பகுதி I

01. அ) 1: 50,000 இட விளக்கப் படத்தின் அறிவினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 1:50,000 அளவுத்திட்டத்தில் இலங்கையின் முழுநிலப் பகுதியையும் உள்ளடக்கப்பட்டு வரையப்பட்டுள்ள மெற்றிக் படத்தாள்களின் எண்ணிக்கை யாது? (1 புள்ளி)

2. இடவிளக்கப்படத்தில் காணப்படும் பௌதீக அம்சம் ஒன்றையும், பண்பாட்டு அம்சம் ஒன்றையும் பின்வரும் அடைப்பினுள் இருந்து எடுத்து எழுதுக.
(மலைத்தொடர், நடைபாதை, தென்னந் தோட்டம், நதி ) (2 புள்ளி)


3. பின்வரும் திசையைக் குறித்துக் காட்டியுள்ள உருவிலிருந்து A, B னும் எழுத்துக்கள் கொண்ட திசைகளின் பெயர்களை எழுதுக. (2 புள்ளி)




4. பின்வரும் A,B தகவல்களுக்குரிய குறியீடுகளையும் உரிய நிறங்களையும் பயன்படுத்தி வரைந்து காட்டுக.
A - கிராம சேவகர் பிரிவு
B - தேயிலைத் தோட்டம்.


5. கீழ் காட்டப்பட்டுள்ள தரைத்தோற்ற அம்சங்களிற்குரிய பெயர்களைக் குறிப்பிடுக.

**A**





P - Q கோடு
(பள்ளத்தாக்கு/சுவடு)
.........................................

**B**




E - F
(தொடரலை நிலம் / தனிக் குன்று)
.........................................

**C**





X கோடு
(பள்ளத்தாக்கு/
கணவாய்)
.........................................



kalvi.lk


ஆ) உமக்கு வழங்கப்பட்டுள்ள உலகப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள A, B, C எனும் எழுத்துக்களுள் அமேசன் நதியைக் காட்டும் எழுத்து யாது?
2. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள D, E, F எனும் எழுத்துக்களுள் பெரிய பிரிப்பு மலைத் தொடரைக் காட்டும் எழுத்து யாது?
3. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள G, H, J எனும் எழுத்துக்களுள் யப்பான் தீவைக் காட்டும் எழுத்து யாது?
4. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள K, L, M எனும் எழுத்துக்களுள் செங்கடலைக் காட்டும் எழுத்து யாது?
5. படத்தில் குறித்துக் காட்டபட்டுள்ள P, Q, R எனும் எழுத்துக்களுள் ரஷ்யாவைக் காட்டும் எழுத்து என்ன?

(5 புள்ளி)

இ. உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.





1. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள A, B, C எனும் எழுத்துக்களுள் சிங்கராஜ காட்டைக் குறிக்கும் எழுத்து யாது?
2. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள D, E, F எனும் எழுத்துக்களுள் கற்பிட்டியைக் காட:டும் எழுத்து யாது?
3. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள G, H, J எனும் எழுத்துக்களுள் யோத வாவியைக் காட்டும் எழுத்து யாது?
4. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள K, L, M எனும் எழுத்துக்களுள் பாசிக்குடா கடற்கரையைக் காட்டும் எழுத்து யாது?
5. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள P, Q, R எனும் எழுத்துக்களுள் கன்னொருவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தை காட்டும் எழுத்து யாது?



kalvi.lk

## பகுதி II

02. பல்வேறு வாயுக்களை உள்ளடக்கியுள்ள வளிக்கோளம், புவியுடன் இணைந்து காணப்படும் ஒரு முக்கிய பகுதியாகும்.




i. உருவில் இலக்கம் 2, 3 ஆகியவற்றுக்குரிய படைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. a) தரையுயர்ச்சியுடன் வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் படையை இலக்கம் 4 னால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அதன் பெயர் யாது?


b) இலக்கம் 1 னால் காட்டப்படும் வாயுப்படையின் பிரதான இலட்சணங்கள் 2 குறிப்பிடுக. (3 புள்ளி)

iii. a) வளிமண்டலத்தின் மூலம் மனிதன் அடையும் பயன்கள் இரண்டினை எழுதுக.

b) வளிமண்டலம் மாசடையும் மனித செயற்பாடு ஒன்றையும் எழுதுக.

c) வளி மண்டலம் மாசடைவதைத் தடுக்கக் கூடிய நடவடிக்கை யொன்றை விளக்குக. (5 புள்ளி)

03. புவியின் அனைத்து உயிர்த் தொகுதிகளின் வளர்ச்சிக்கு நீர் அவசியமாகும்.




i. a) கழிவு நீரோட்டம் என்பது யாது?

b) உலகில் மொத்த நீர்ப்பரப்பில் மனிதனுக்கு பயன்படுத்தக் கூடிய மேற்பரப்பு நீரின் அளவு யாது?

ii. பின்வரும் நீரியல் வட்ட உருவினைப் பயன்படுத்தி அதில் A, B, C எனும் எழுத்துக்களுக்கு உரிய பெயர்களைக் குறிப்பிட்டு இச்செயற்பாடு பற்றி சுருக்கமாக விளக்குக. (3 புள்ளி)

iii. a) தற்பொழுது நீரின் தரம் குறைவடைந்து செல்வதற்குக் காரணமான மனித செயற்பாடுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

b) எதிர்காலத்தில் குடிநீருக்குப் பற்றாக்குறை ஏற்படுமானால் அதனைச் சமாளிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

04. புவிக்கோளின் தாவரங்களும் விலங்குகளும் ஒன்றிணைந்து முழுமையான உயிர்ச் சூழலியல் தொகுதியே உயிர்கோளமாகும்.


i. உயிர்க்கோளத்தில் இடைத்தொடர்புச் செயன்முறையை மேற்கொள்ளும் உப தொகுதிகள் இரண்டு தருக. (5 புள்ளி)

ii. மேற்கூறப்பட்ட உப தொகுதிகளின் எல்லைகளைக் குறிப்பிடுக.

iii. a) தற்காலத்தில் மனித செயற்பாடுகள் காரணமாக உயிர்க்கோளத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

b) இதனைத் தடுப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

05. மனித செயற்பாடுகளில் பெரும்பாலானவை, உயிரினங்களின் வாழிடமான கற்கோளத்திலேயே இடம் பெறுகின்றன. கற்கோளத்தின் அமைப்பினை பின்வரும் உரு காட்டுகிறது.




i. இல. 1, 2 என்பவற்றால் கற்கோளத்துக்குரிய சில பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக. (5 புள்ளி)

ii. a) இல 3 இனால் குறித்துக்காட்டப்பட்டுள்ள படையைப் பெயரிடுக.

b) இல. 1, 2 இனால் அடையாளமிடப்பட்ட பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ள படைகளை ஒழுங்கு முறையாகத் தருக.


iii. a) இல 4 இனால் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்ச்சியின்மையைக் குறிப்பிடுக.

b) கற்கோளத்தின் மேற்பரப்புப் படையானது மனித நடவடிக்கைக்கு உதவும் முறையை மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக. (5 புள்ளி)



kalvi.lk

06. உலகின் அகலக் கோட்டு வெப்பநிலைப் பரம்பலை அடிப்படையாகக் கொண்டு பிரதான காலநிலை வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.





i. a) பின்வரும் உருவில் A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள காலநிலை யாது?
   b) இக்காலநிலை வலயத்தில் காணப்படும் விசேட காலநிலை அம்சம் யாது? (2 புள்ளி)

ii. a) B, C எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்களைப் பெயரிடுக.
   b) B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயத்தில் காணப்படும் காலநிலை அம்சம் யாது? (3 புள்ளி)

iii. a) C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயத்தில் காணப்படும் விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

- வினா இல. 7, 8 ஆகியவற்றுக்கு பின்வரும் உலகப்படத்தைப் பயன்படுத்துக.

07. புவி மேற்பரப்பில் காணப்படும் பௌதீக அம்சங்கள் பருமன் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும்.




i. a) A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள நிலத்தால் சூழப்பட்ட கடல் யாது?
   b) B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள சமுத்திரத்தில் மிக ஆழத்தில் அமைந்தள்ள ஆழியின் பெயர் யாது?

ii. a) C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள எரிமலைத் தீவு யாது?
   b) தீவாக உள்ள ஒரு நாட்டின் அவைிடத்தினால் ஏற்படும் நன்மையொன்றை எழுதுக.
   c) சமுத்திரங்களை வளமாக மனிதன் பயன்படுத்தும் சந்தர்ப்பமொன்றை எழுதுக. (3 புள்ளி)

iii. a) மேட்டுநிலம் எனப்படுவது யாது?
   b) சமவெளிப் பிரதேசத்தோடு தொடர்புடைய மானிட நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக. (5 புள்ளி)

08. ஆரம்ப காலத்திலிருந்தே மக்கள் உணவினை உற்பத்தி செய்வதற்கு விவசாயத்தில் ஈடுபட்டனர்.

i. a) இல 1 இனால் அடையாளமிடப்பட்ட நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசம் யாது?
   b) இல. 2 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள கோதுமை உற்பத்தி செய்யப்படும் நாட்டைப் பெயரிடுக. (3 புள்ளி)

ii. a) தேயிலை, கோதுமை வளர்வதற்கு அவசியமான மண்வகையை ஒழுங்கு முறையாகத் தருக.
   b) உலகில் தற்பொழுது அதிகளவு கோதுமை உற்பத்தி செய்யும் நாடு எது? (3 புள்ளி)

iii. a) கோதுமைப் பயிர்ச்செய்கையின் விஷேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.
   b) நெற் பயிர் செய்கையின் விசேட பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

* * *



kalvi.lk

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
புவியியல் - தரம் 10
விடைப்பத்திரம் I

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01. இடை மண்டலம் | 11. பிழை | 21. நழுவு வீதம் எனப்படும் | 31. 3. ஒட்சிசன் |
| 02. காலநிலை | 12. சரி | 22. நீர் | 32. 2. உயிர்கோலம் |
| 03. வெளி மையம் | 13. சரி | 23. தென் அமெரிக்கா | 33. 2. படைமண்டலம் |
| 04. ஆசியா | 14. சரி | 24. வெப்ப | 34. 1. ஆசியா |
| 05. கண்டங்கள் | 15. பிழை | 25. கோதுமை | 35. 2. சீசெல்ஸ் |
| 06. நைல் | 16. 1. BDA | 26. P | 36. 4. அரிஸ்டோடில் |
| 07. அவுஸ்திரேலியா | 17. 3. CAD | 27. K | 37. 2. சஹாரா |
| 08. உவர் நீர் | 18. 2. DBA | 28. E | 38. 4. மடகஸ்கார் |
| 09. நெல் | 19. 4. BCA | 29. B | 39. 3. இறப்பர் |
| 10. ஆசியா | 20. 1. ACB | 30. A | 40. 1. மழை வீழ்ச்சி 1900 mm - 5460mm |

## பகுதி II

01. அ. 1. 92
2. பௌதீகம் : மலைத்தொடர், நதி
3. பண்பாட்டு அம்சம் : நடைபாதை, தென்னந்தோட்டம்.
4. உரிய குறியீடு, நிறமும்.
5. A - பள்ளத்தாக்கு
B - தனிக்குன்று
C - கணவாய்.

ஆ. 1. B 2. F 3. H 4. K 5. R
இ. 1. A 2. E 3. G 4. M 5. R

02. i. 2. படை மண்டலம் 3. இடை மண்டலம்
ii. a) 4 வெப்ப மண்டலம்
b) 1 மாறன் மண்டலம்
வெப்பநிலை, மழைவீழ்ச்சி, அமுக்கம், காற்று.
ஈரப்பதம் முகில் இங்கு உருவாகும்.
விமானங்கள் பயணிக்கலாம்.
iii. a) உயிரினங்களின் சுவாசித்துக்கு ஒட்சிசன் பெற்றுக் கொடுத்தல்.
வெப்பநழுவு வீதம் ஏற்படும்.
ஒளித்தொகுப்புக்கு அவசியம்.
தாவரங்களின் நிலைப்பாட்டிற்கு அவசியம்.
b) இயற்கை - எரிமலை வெடிப்பு,
மனித செயற்பாடு, காடு அழித்தல், குப்பைகளை எடுத்தல்.
c) குப்பைகளை எரித்தல், பிளாஸ்டிக் எரித்தல், போன்றவற்றைத் தடுத்தல்.

03. i. a) மழைவீழ்ச்சி மூலம் புவிக்கு வந்தடையும் நீரின் ஒரு பகுதி நிலத்தின் மேற்பரப்பில் கழுவு நீரோட்டமாகப் பாய்தல்.
b) 1%
ii. a) தாவரப் போர்வை ஆவியாதல்.
b) ஒடுங்குதல்.
c) மழைவீழ்ச்சி செயற்பாட்டை விளக்குக.
iii. a) விவசாயச் செய்கையில் பசளை, கிருமி நாசினி பயன்படுத்தல்.
தொழிற்சாலை கழிவுகள் நீரில் சேர்தல்.
மலசலம் சேர்தல்.
b) நீர்வீண் விரயத்தைத் தவிர்த்தல், நீரின் தரத்தைப் பேணல்.

04. i. நீர்க்கோளம், கற்கோளம், வளிக்கோளம்.
ii. தாவரங்களின் வேர்த்தொகுதிகள் மற்றும் மண் அங்கிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது கற்கோளம்.
ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்கு தேவையான வெப்பத்தைப் பெறிதும் கொடுத்தல், நீரக்கோளம்.
பறகைள் பறந்து செல்கின்ற ஆகக் கூடிய எல்லை.
iii. a) காடுகள் அழித்தல், உயிர் தொகுதி அழிதல்.
b) காடாக்கம், உயிரிகளைப் பாதுகாத்தல், மண்பாதுகாத்தல்.


Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

05. i. 1. சமுத்திர ஓடு
2. கண்ட ஓடு
ii. a) 3 மேல்மூடி
b) 1 கிரைற்று (கருங்கல்) பாறை
2 பசாலட் பாறை
iii. a) 4 மோகோரோவிச்
b) பாறைகளைக் கொண்டுள்ளது, கனிப்பொருட்கள், நிலநெய் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மண் காணப்படுவதனால் பயிரச் செய்கைக்கு உகந்தது.

06. i. a) A- அயன மண்டலக் காலநிலை
b) b - அயன மண்டல மொன்சூன் காலநிலை.
ii. a) B - இடை வெப்பக் காலநிலை
c - குளிர் காலநிலை
b) மத்திய காலைநிலை
iii. a) குளிர் காலநிலை :
மழைவீழ்ச்சி மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படல்.
மூடுபனி, மழைப்பனி
தாவர வளர்ச்சிக்கு போதுமான காரணிகள் இன்மை.
b) அயன வலயக் காலநிலை :
அதிக மழைவீழச்சியும் அதிக வெப்பநிலையும்.
குளிர் பருவம் இன்மை.
காடுகள் வளர்ந்திடுதல், காடுகளும், பாலைவனங்களும் காணப்படல்.

07. i. a) A= ஏரல் கடல்
b) B=மரியானா அகழி
ii. a) C ஐஸ்லாந்து
b) மீன்பிடி, நீர்ப்போக்குவரத்து, பாதுகாப்பு.
c) சுற்றுலா, மீன்பிடி, ஆராய்ச்சி வினோதச் செயற்பாடு.
iii. a) மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலங்கள்.
b) பல்வேறு கட்டங்கள் கட்டுதல், குடியேற்றங்கள் நிறுவுதல், பாதைகள் அமைத்தல், பயிர்ச் செய்கை நடவடிக்கைகள்.

08. i. a) 1. சக்ரமெண்டோ.
2. அவுஸ்திரேலியா.
b) சீனா
ii. a) கோதுமை.
பாரிய நிலங்கள் பயிர்ச் செய்கை.
இயந்திரப்பாவனை
பரந்த உலக சந்தை.
வளரச்சியடைந்த முன்னேற்றமான தொழிநுட்பம்.
b) நெல்.
நிலம் துண்டாக்கப்பட்டிருத்தல்.
ஏனைய நாடுகள் நுகர்வுக்கு உற்பத்தி செய்தல்.
ஆசிய நாடுகள் மனித உழைப்பை அதிகமாகப் பாவித்தல்.
மரபணுத் தொழிநுட்பம்.

* * *


kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**